TNRM100007342022



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.148/2022**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சாயல்குடி காவல் நிலைய குற்ற எண்.15/2019. |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | செல்வம் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | முருகன் |
| 4. | வயது | 29/2019 |
| 5. | தொழில் | - |
| 6. | முகவரி | தர்மராஜபுரம். |
| **2 வது எதிரியின் விபரம் (இறப்பு)** | | |
| 7. | பெயர் | வைரவன் |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | வீரநாடார் |
| 9. | வயது | 39/2019 |
| 10. | தொழில் | - |
| 11. | முகவரி | தர்மராஜபுரம் |
| **3 வது எதிரியின் விபரம்** | | |
| 12. | பெயர் | பாஸ்கர் |
| 13. | தகப்பனார்/கணவர் பெயர் | வேலுச்சாமி |
| 14. | வயது | 40/2019 |
| 15. | தொழில் | - |
| 16. | முகவரி | தர்மராஜபுரம் |



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:43 +0530

TNRM100007342022



| 4 வது எதிரியின் விபரம் | | |
|---|---|---|
| 17. | பெயர் | காமராஜ் |
| 18. | தகப்பனார்/கணவர் பெயர் | அந்தோணிகுரூஸ் |
| 19. | வயது | 48/2019 |
| 20. | தொழில் | - |
| 21. | முகவரி | தர்மராஜபுரம் |
| 22. | சம்பவ நாள் | 20.01.2019 ம் தேதி 17.00 மணி |
| 23. | புகார் தேதி | 21.01.2019 ம் தேதி 17.00 மணி |
| 24. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | A1 – Not arrest<br>A2, A3, A4 – 21.01.2022 (Station Bail) |
| 25. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | A1 – Not arrest<br>A2, A3, A4 – 21.01.2022 (Station Bail) |
| 26. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 27. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 18.08.2022 |
| 28. | விசாரணை முடிவுற்ற நாள் | 04.03.2026 |
| 29. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | 1, 2, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும், 4 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | 1, 2, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும், 4 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் |
| 30. | காலதாமதத்திற்கான காரணம் | - |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:47 +0530

TNRM100007342022



| | | |
|---|---|---|
| 31. | அரசு தரப்பு சாட்சிகள் | சாட்சிகள் / முதல் விசாரணை / குறுக்கு விசாரணை<br>அ.சா.1 / 02.03.2026 / 02.03.2026<br>அ.சா.2 / 02.03.2026 / 02.03.2026<br>அ.சா.3 / 02.03.2026 / 02.03.2026<br>அ.சா.4 / 02.03.2026 / 02.03.2026 |
| 32. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 04.03.2026 |
| 33. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 34. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | - |
| 35. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.A.ராஜன் |
| 36. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.A.R.கோபாலகிருஷ்ணன் |
| 37. | எதிரிகளின் கூற்று | 1, 3, 4 வது எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 38. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 06.03.2026 |
| 39. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 06.03.2026 |
| 40. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை 1, 3, 4 வது எதிரிகளுக்கு சாதகமாக 1, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும், 3 வது எதிரி |



SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:51 +0530

| | | |
|---|---|---|
| | | மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. 2 வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய் விட்டது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 04.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை - 1 திரு.A.ராஜன் அவர்கள் ஆஜராகியும், 1, 3, 4 வது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், 2 வது வழக்கு விசாரணையின்போது இறந்து விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை அற்றுப்போகச் செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:54 +0530

**தீர்ப்புரை**

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. எதிரியிடம் புகார்தாரரின் தம்பி மகன் ராமச்சந்திரன் என்பவரது சம்பள பாக்கியை கேட்டதால் ராமச்சந்திரனை 20.01.2019 ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு வழக்கின் எதிரிகள் நால்வரும் சேர்ந்து அசிங்கமாக பேசி, சண்டை போட்டபோது வீட்டிலிருந்து வெளியே வந்த புகார்தாரர் எதிரிகளிடம் அவருக்கு சம்பள பாக்கி கொடுக்காமல் இருந்ததால் கேட்கத்தனோ செய்வான் ஏன் சண்டை போடுகிறீர்கள் என கேட்டபோது எதிரிகள் அனைவரும் சேர்ந்து நீ என்னடா தேவிடியா மகனே அவனுக்கு வக்காலத்து பேசுற என்று அசிங்கமாக பேசி, 1வது எதிரி புகார்தாரரை கையால் அடித்தும், 3வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரை மிரட்டி புகார்தாரரின் இடது கை ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல் ஆகியவற்றில் ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், 2, 4வது எதிரிகள் புகார்தாரரை கையால் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக 1, 2, 4வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 18.08.2022 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின்



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:13:58 +0530

நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 05.04.2024ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் 1, 2, 4வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 7 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அ.சா.2, அ.சா.3 ஆகவும், புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சம்பவ சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள் ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 5 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள்

குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் சுமார் 10, 15 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அங்கு சென்று அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து தனக்கு இடது கை விரலில் காயம் ஏற்பட்டது என்றும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டதல்ல என்றும், இச்சம்பவம் குறித்து சாயல்குடி காவல் நிலையத்தில் தெரிவித்தபோது சாயல்குடி போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டதாகவும், அ.சா.1 னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் ஊரில் சுமார் 10, 15 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அ.சா.2 ம், அ.சா.1 ம் அங்கு சென்று அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து அ.சா.1 க்கு இடது கை விரலில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டதல்ல என்றும், அ.சா.1 இந்த சம்பவம் குறித்து காவல் துறையினரிடம் தெரிவித்தபோது அவர்கள் எழுதப்படாத வெள்ளைத்தாளில்


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:07 +0530

கையொப்பம் வாங்கியதாகவும், காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் (அ.சா.ஆ.1) தன்னுடையது என்றும், அதில் என்ன எழுதியிருந்து என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 தனது சாட்சியத்தில், வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 21.01.2019ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.பாண்டி என்பவர் சாயல்குடி காவல் நிலைய பொறுப்பில் இருந்த போது என்பவர் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கன்னிராஜபுரத்தை சேர்ந்த மார்கண்ட நாடார் மகன் சுப்பிரமணி என்பவரை விசாரித்து 15.00 மணிக்கு அவர் கொடுத்த புகார் வாக்குமூலம் (அ.சா.ஆ.2) பெற்று 17.00 மணிக்கு வந்து புகார் வாக்குமூலத்தினை தன்மைக்கேற்ப சாயல்குடி காவல் நிலையக் குற்ற எண்.15/2019 பிரிவுகள் 294(b), 323, 324 இ.த.ச.-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளதாகவும், அன்றைய தினமே 18.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ராமர் மற்றும் வாலவெட்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சம்பவம் உண்மையென தெரியவந்து 2, 3ம் எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 21.01.2022ம் தேதி 20.15 வெட்டுக்காடு என்ற இடத்தில் வைத்து கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:10 +0530

வைத்ததாகவும், 4 ம் எதிரியை அன்றைய தினமே 20.45 மணிக்கு வெட்டுக்காடு என்ற இடத்தில் கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், 1 ம் எதிரி தலைமறைவாக இருந்ததால் கைது செய்யவில்லை என்றும், காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த கடலாடி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முத்துக்குமார் என்பவரை விசாரித்து அவர் அ.சா.1 க்கு அளித்த காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு பெற்றுள்ளார் என்றும், மருத்துவர் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.6 வழங்கியுள்ளார் என்றும், வழக்கில் தடயப்பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 324 இ.த.ச.-ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து 1, 3, 4 வது எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ் 04.03.2026 ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1, 4 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324 ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

**தீர்வு**

11. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் 1, 3, 4 வது எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். 1, 3, 4 வது எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1 ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து 1, 3, 4 வது எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

12. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.4 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

13. அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, எதிரியிடம் புகார்தாரரின் தம்பி மகன் ராமச்சந்திரன் என்பவரது சம்பள பாக்கியை கேட்டதால் ராமச்சந்திரனை 20.01.2019 ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு வழக்கின் எதிரிகள் நால்வரும் சேர்ந்து அசிங்கமாக பேசி, சண்டை போட்டபோது வீட்டிலிருந்து வெளியே



SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:18 +0530

வந்த புகார்தாரர் எதிரிகளிடம் அவருக்கு சம்பள பாக்கி கொடுக்காமல் இருந்ததால் கேட்கத்தனோ செய்வான் ஏன் சண்டை போடுகிறீர்கள் என கேட்டபோது எதிரிகள் அனைவரும் சேர்ந்து நீ என்னடா தேவிடியா மகனே அவனுக்கு வக்காலத்து பேசுற என்று அசிங்கமாக பேசி, 1வது எதிரி புகார்தாரரை கையால் அடித்தும், 3வது எதிரி கையில் வைத்திருந்த அருவாளால் புகார்தாரரை மிரட்டி புகார்தாரரின் இடது கை ஆள்காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல் ஆகியவற்றில் ரத்தக்காயத்தை ஏற்படுத்தியும், 2, 4வது எதிரிகள் புகார்தாரரை கையால் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

14. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் மனு அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் சுமார் 10, 15 நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அங்கு சென்று அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து தனக்கு இடது கை விரலில் காயம் ஏற்பட்டது என்றும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளால் ஏற்பட்டதல்ல என்றும், இச்சம்பவம் குறித்து சாயல்குடி காவல் நிலையத்தில் தெரிவித்தபோது சாயல்குடி போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின்

சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் மனு மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.4 தவிர மற்ற சம்பவ சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள்தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் 1, 4வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை 1, 3, 4வது எதிரிகளுக்கு சாதகமாக 1, 4வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 324ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:27 +0530

248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. 2வது எதிரி இறந்து விட்டதால் அவர் மீதான குற்றச்சாட்டுகள் அற்றுப்போய் விட்டது.

17. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

18. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் தேதி வெள்ளிக்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | சுப்பிரமணியன் |
| அ.சா.2 | ராமச்சந்திரன் |
| அ.சா.3 | ஆனந்தராஜ் |
| அ.சா.4 | முருகன் |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 21.01.2019 | புகார் வாக்குமூலத்திலுள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் |
| Ex.P.2 | 21.01.2019 | புகார் வாக்குமூலம் |
| Ex.P.3 | 21.01.2019 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.4 | 21.01.2019 | பார்வை மகஜர் |
| Ex.P.5 | 21.01.2019 | மாதிரி வரைபடம் |
| Ex.P.6 | 20.01.2019 | காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**குறிப்பு:-**

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.